**உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது

கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் விசேட அதிகாரத்திற்கிணங்க கொடுக்கல் வாங்கல்கள் நிறைவேற்றப்பட்டது எனவும் பிரயோகிக்கக்கூடிய அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அனுமதிப்பதற்கும் அவசியமாக கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததும் எனவும் சொத்துக்களிற்கான கணக்களிப் பொறுப்பை பேணுவதற்கும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது விசேட அங்கீகாரத்திற்கு இணங்க மாத்திரம் சொத்துக்களை அணுகுவதை அனுமதிப்பதற்கும் மற்றும் தற்போதுள்ளவாறான சொத்துக்களுடன் நியாயமான இடைவெளிகளில் மற்றும் பொருத்தமான நடவடிக்கை ஏனைய வேறுபாடுகளுடன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டும் என்பவற்றையும் நியாயமாக உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கணக்கீட்டு போதியளவு கட்டுப்பாடுகளிற்கு “திட்டமிடுதல் மற்றும் பராமரிப்பு” என்ற முறைமையொன்று நிறுவகத்திற்கு தேவைப்படுகின்றது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிதியத்தால் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில முன்னைய ஆண்டுகளுக்காக மற்றும் மீளாய்வாண்டிற்காக பெறப்பட்டிருந்த பங்களிப்புத் தொகை ரூபா 91,246,749 காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்ளுராட்சி சேவை ஓய்வூதியத்தின் பயனாளிகளுக்கு மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு 2011 ஆம் ஆண்டு முதல் இந்த நிதியத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருக்காததால் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அட்டுறு அடிப்படையில் சீர்செய்யப்படமாட்டாது. | நியமத்தின் பிரகாரம் வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | தொடர்புள்ள அறிக்கை பிரகாரம் பெறுமத<br>ரூபா | வேறுபாடு<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய பங்களிப்பு தொகை | 296,675,317 | 51,783,885 | 244,891,432 | 2021 திசெம்பர் மாதம் அனுப்பட்ட காசோலையொன்று 2022 சனவரி மாதம் எமக்குக் கிடைக்காமையால் 2021 திசெம்பர் மாதம் கணக்கிடப்பட்டமையால் இவ் வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | பெற வேண்டிய பங்களிப்புப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெற வேண்டிய பங்களிப்பு தொகை | 31,440,706 | 47,924,861 | 16,484,155 | 2021 ஆம் வருடத்தில் முடிவடைந்த மூன்று மாதத்திற்கு உரிய இறப்புக்கள் நீக்கப்படல் 2021 திசெம்பர் மாத பற்றுச்சீட்டுக்களில் மேற்கொள்ளப்பட்டதுடன் இது தொடர்பாக உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தல் 2022 சனவரி மாதம் மேற்கொள்ளப்பட்டமையால் உள்ளுராட்சி சேவைகள் நிதியத்தின் கணக்கின் பிரகாரம் 2021.1231 இல் மீதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பெற வேண்டிய பங்களிப்புப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (இ) | பெற வேண்டிய பங்களிப்பு தொகை | 256,491 | 117,690 | 374,181 | மாதாந்த பற்றுச்சீட்டுக்கள் மூலம் அந்தந்த நிறுவனத்தினால் கொடுப்பனவு செய்யப்படுகின்ற தொகை தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை எவ்வித நிறுவனமும் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணத்தால் வேறுபாடொன்று ஏற்பட்டிருந்தாக தெரியப்படுத்தவில்லை. | பெற வேண்டிய மற்றும் செலுத்த வெண்டிய மீதிகள் தீர்க்கப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| பெற வேண்டிய பங்களிப்பு பணம். | 566,236,315 | 2021 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 302 உள்ளூராட்சி நிறுவனங்களின் ரூபா 1,117,176,437 ஆன பெற வேண்டிய பங்களிப்புத் தொகையில் 123 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரிய ரூபா 566,236,315 ஆன பெற வேண்டிய பங்களிப்புத் தொகைக்கான மீதி உறுதிப்படுத்தல் பெறப்படவில்லை. | இணங்குகின்றேன். உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கடிதம் மூலமும் தொலைபேசி அழைப்புக்கள் மூலமும் உள்ளூராட்சி நிறுவன அதிகாரிகளை தொடர்பு கொண்டு பெற வேண்டிய பங்களிப்புத் தொகைக்கான மீதி உறுதிப்படுத்தல்களை எதிர்வரும் காலங்களில் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | மீதி உறுதிப்படுத்தல் பெறப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 302 உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நிலுவை பங்களிப்புத் தொகை ரூபா 455,320,462 ஆனது | உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகையை அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பெற வேண்டிய பங்களிப்புப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | வருடத்திற்குள் பெறப்பட்டிருக்கவில்லை. | தொலைபேசி அழைப்புக்களின் மூலமும் உள்ளூராட்சி நிறுவன அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் எமது இலக்கம் வீவெ/ப/பா/ஹி/லிகொ/02 மற்றும் 2021.11.03 ஆந் திகதிய உள்ளூராட்சி நிறுவன கடிதம் மூலம் 2020 ஆம் வருடத்தில் எவ்வித பங்களிப்புத் தொகையொன்றும் செலுத்தாத நிறுவனங்களுக்கு அது தொடர்பாக தெரிவிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஆ) | திறப்பனே பிரதேச சபையின் மரணித்த உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 435,356 ஆன தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை திறப்பனே பிரதேச சபையின் அறவிடப்பட வேண்டிய ரூபா 435,355.76 ஆன தொகை மற்றும் மகா ஓயா பிரதேச சபையின் அறவிடப்பட வேண்டிய 0.34 ஆன தொகை கடிதம் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டு எதிர்காலத்தில் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய பங்களிப்புப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 1/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் | நிதியங்களால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அரசாங்க பாதீட்டின் கீழ் அடைந்துகொள்ள முடியுமானால், அந்த நிதியங்கள் முடிவுறுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்நிதியத்தின் | அரச நிதிச் சுற்றறிக்கை இல்க்கம் 07/2006 இன் பிரகாரம் 2016 வரவு செலவுத்திட்ட முன்மொழிவு இலக்கம் 425 மற்றும் 426 இன் மூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கு இணங்க சட்டபூர்வ மற்றும் | நிதியம் மூடப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 876 (2)(ஆ) | நடவடிக்கைகள் ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழான பாதீட்டு ஒதுக்கீடுகளுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், நிதியம் விளைவற்றுக் காணப்படுவதாக கணக்கு குறிப்பு இலக்கம் 4 மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மூடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டபூர்வமற்ற நிதியங்கள் மீளாய்வு செய்யப்பட்டு பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்படுவதை உறுதிசெய்வதற்கு பொதுத் திறைசேரியினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் 2017 மார்ச் 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட குழுவின் அறிக்கைப் பிரகாரம் உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் உட்பட நிதியங்கள் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் மூடப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனினும் அதன் அறிக்கை தொடர்பாக கொள்கைத் தீர்மானமொன்று எடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்து வதற்கான அதிகாரம் வழங்கப்படல் தொடர்பாக இதுவரை அறிக்கையிடப்படவில்லை. | |
| (ஆ) | 2012 பெப்ரவரி 08 ஆம் திகதிய 01/2012 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | ஒவ்வொரு மாதமும் நிதியத்தில் உள்ள உறுப்பினர்களின் இறப்புக்கள் தொடர்பான அறிக்கைகள் மாவட்டச் செயலாளர்களிடம் இருந்து தொடர்ந்து வரும் மாதத்தின் 25 ஆம் திகதிக்கு முன்னர் கோரப்பட்டு அந்த அறிக்கைகளின் பிரகாரம் உரிய நேரத்தில் இறப்புக்களை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் போது பெறவேண்டிய பங்களிப்புத் தொகை கணக்கிற்கு மற்றும் திரண்ட நிதியக் கணக்கிற்கு 2013 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 583 உறுப்பினர்களின் | 2019/02/28 ஆம் திகதிய 3/2/7 ஆம் எனது இலக்க கடிதங்கள் மூலம் அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களின் செயலாளர்களுக்கும் உறுப்பினர்களின் மரணம் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக இறந்த ஓய்வூதியம் பெறுவோரின் விபரங்களை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்புமாறு கோரப்பட்டு தொடர்புடைய உள்ளூராட்சி சபைகளிற்கு பெயர் ஆவணங்களுடன் சேர்த்து தரவுத்தளத்தில் கிடைக்கக்கூடிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | ஓய்வூதிய சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

இறப்புக்கள் தொடர்பாக பெறவேண்டிய ரூபா 4,147,147 பெறவேண்டிய பங்களிப்புத் தொகை கணக்கிற்கு மற்றும் திரண்ட நிதியக் கணக்கிற்கு சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 22,710,992 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,672,336 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 20,038,656 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவிற்கு பங்களிப்புக்கள் காசு வருமானம் ரூபா 4,022,827 ஆல குறைவடைந்தமை மற்றும் செலவுகள் ரூபா 16,015,828 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாகும்.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து வருடத்திற்கான பங்களிப்புத் தொகை பெறுவனவுகள் ரூபா 91,246,749 ஓய்வூதிய நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டதாக குறிப்பிடப்பிடப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் திறைசேரி ஒதுக்கங்களைப் பயன்படுத்தி 44,018 ஓய்வூதியதாரர்களுக்கு ரூபா 946,249,496 ஆன பங்களிப்புத் தொகை செலுத்தபட்டமையால் நிதியத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். | நிதியதிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |